# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் II பரீட்சை - 2026 சனவரி

## (204) வணிக முகாமைத்துவம்

இவ்வினாத்தாள் 07 கட்டாய வினாக்களைக் கொண்ட **A, B, C** என்ற மூன்று பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

### பகுதி A

**வினா இல. 01**

வினா இல. 01 ஆனது பதினைந்து (15) OTQs ஐக் கொண்டிருந்தது. இவ்வினாவுக்கான மொத்தப் புள்ளிகள் 25 ஆகும். வினாக்கள் வணிக முகாமைத்துவப் பாடத்தின் பெரும்பாலான பகுதிகளை உள்ளடக்கியவாறு முன்வைக்கப்பட்டிருந்தன.

உப வினாக்கள் இல. **1.1** தொடக்கம் **1.5** வரையானவற்றைப் பொறுத்த வரையில், 10 புள்ளிகளைப் பெறுவதற்கு, மிகப் பொருத்தமான விடை தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதுடன் அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கம் விடைப்புத்தகத்தில் எழுதப்பட வேண்டும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடைகளைத் தெரிவு செய்து, முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். பாடம் தொடர்பில் குறைந்த அறிவைக் கொண்டிருந்த சில பரீட்சார்த்திகள் சரியான விடையைத் தெரிவு செய்யத் தவறியிருந்ததனர். சில பரீட்சார்த்திகள் சரியான விடையின் இலக்கத்திற்குப் பதிலாக விடையை முழுமையாக எழுதியிருந்ததை அவதானிக்க முடிந்தது.

வினா இலக்கங்கள் **1.6** தொடக்கம் **1.10** வரையானவற்றைப் பொறுத்தவரை, 05 புள்ளிகளைப் பெறுவதற்காக, பரீட்சார்த்திகள் அடைப்புக்குறிக்குள் தரப்பட்ட இரண்டு விடைகளிலிருந்து சரியான விடையைத் தெரிவு செய்ய வேண்டும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்குச் சரியான விடைகளை அளித்திருந்தனர். சிறிய எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் சரியான விடையை எழுதுவதற்குப் பதிலாக 1 அல்லது 2 என எழுதியிருந்தனர்.

பரீட்சார்த்திகள் 10 புள்ளிகளைப் பெறுவதற்கு உப வினாக்கள் **1.11** தொடக்கம் **1.15** வரையானவற்றிற்கு வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு, குறுகிய விடைகளை எழுதுமாறு கேட்கப்பட்டது. ஆனால் அதிகமான விடைகள் குறுகிய வடிவில் இருக்கவில்லை. இந்த 05 வினாக்களுக்கும் பல மாற்று விடைகள் காணப்பட்டதுடன் அதற்கேற்ப புள்ளிகள் ஒதுக்கப்பட்டன. **அத்துடன் சகல மூன்று மொழிமூலத்திலும் பரீட்சை எழுதிய சிறு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் 1.11 – 1.15 வரையானவற்றிற்கான விடைகளை முற்றாகத் தவிர்த்திருந்ததை அவதானிக்க முடிந்தது.**

**1.11** இவ்வினாவில் ஒரு வெற்றிகரமான பண்டக்குறிக்கான இரண்டு தேவைகளைக் குறிப்பிடுமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்பட்டிருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குச் சரியாக விடையளித்திருந்த போதிலும் ஏனையோர் தொடர்புடைமை, தெளிவு, ஒத்திசைவு மற்றும் நிலைத்தன்மை போன்ற துல்லியமான விடைகளை அளிக்கத் தவறியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் தேவைகளைக் குறிப்பிடுவதற்குப் பதிலாக வெற்றிகரமான பண்டக்குறி ஒன்றின் அனுகூலங்களை எழுதியிருந்தனர்.

**1.12** இங்கு, அதிகாரத்துவ முகாமைக் கோட்பாட்டின் இரண்டு பண்புகளைக் குறிப்பிடும்போது, பலர் விவரணம், படிநிலை, நிபந்தனைகள், ஆள்சாராமை, பொது/ தனியார் பிரிவுகள் போன்ற திருப்திகரமான விடைகளை வழங்குவதற்குத் தவறியிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும், ஒவ்வொரு ஏற்றுக்கொள்ளத்தக்க விடைக்கும் புள்ளிகள் வழங்கப்பட்டன.

**1.14** இவ்வினாவில் பரீட்சார்த்திகள் ''சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்'' என்பதைச் சுருக்கமாக விபரிக்குமாறு கேட்கப்பட்டனர். சில விடைகள் நீண்டதாக அல்லது மிகவும் குறுகியதாக இருந்த போதிலும், சராசரி எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் சரியான விடைகளை வழங்கியிருந்தனர். சரியான வரையறைகளின் பாவனை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இருந்ததுடன் பல பரீட்சார்த்திகள் தவறான வரையறைகளை வழங்கியிருந்தனர்.

**1.15** பரீட்சார்த்திகளிடம் ''மனித வள முகாமைத்துவத்தின் இரட்டைப் பொறுப்பினைச்'' சுருக்கமாக விபரிக்குமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் வினாவுக்கு விடையெழுதுவதைத் தவிர்த்திருந்த அதே வேளை சிலர் விளங்கப்படுத்தவில்லை அல்லது தவறாக விளக்கம் அளித்திருந்தனர்.

***<u>இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.</u>***

## <u>பகுதி B</u>

இப்பிரிவு மொத்தம் 50 புள்ளிகளுக்கு, ஒவ்வொன்றும் 10 புள்ளிகளைத் தாங்கிய 05 கட்டாய வினாக்களை உள்ளடக்கியிருந்தது. இந்த 5 வினாக்களுக்கும் பெரும்பாலான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை மட்டம் சராசரி மட்டமாக இருந்தது. சில பரீட்சார்த்திகள் சில வினாக்களுக்கு விடை எழுதவில்லை என்பதையும் சொற்பளவான பரீட்சார்த்திகள் சில வினாக்களுக்கு திருப்தியற்ற விடைகளை எழுதியிருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

### வினா இல. 02

இவ்வினா **(a), (b), (c)** என்ற மூன்று பகுதிகளை உள்ளடக்கியிருந்தது.

**(a)** பரீட்சார்த்திகள் பகுத்தறிவான தீர்மானமெடுத்தல் செயன்முறையின் படிமுறைகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டனர். ஒரு சில பரீட்சார்த்திகள் வினாவுக்குச் சம்பந்தமற்ற விளக்கங்களை வழங்கியிருந்தனர். சில சந்தர்ப்பங்களில் ''தீர்மானம்'' என்ற பதம் ''பிரச்சினை'' என்பதற்குப் பதிலாகப் பிழையாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. இது ஒரு நேரடி வினாவாகும். இப்பகுதிக்கு விடையளித்த அதிகளவான பரீட்சார்த்திகளால் இதற்காக ஒதுக்கப்பட்ட புள்ளிகளைப் பெற முடிந்திருந்தது.

**(b)** இவ்வினா **Tech Solutions (Pvt) Ltd**. இன் தீர்மானமெடுத்தல் செயன்முறையில் திட்டமிடல் எவ்வாறு உதவுகிறது என்பதை விபரிக்குமாறு பரீட்சார்த்திகளைக் கேட்டிருந்தது. இது ஒரு நேரடியான மற்றும் இலகுவான வினாவாக இருந்த போதிலும் சில பரீட்சார்த்திகள் மோசமான விடைகளை அளித்திருந்தனர். பல பரீட்சார்த்திகள் தீர்மானமெடுத்தலுக்கு திட்டமிடல் வசதியளிக்கிறது என்பதை அடையாளங் காணவில்லை, இது முகாமைத்துவ எண்ணக்கருக்கள் பற்றிய அவர்களது அறிவு போதிய மட்டத்தில் இல்லை என்பதைக் குறிக்கிறது.

**(c)** இவ்வினாவானது நான்கு (04) திட்டமிடல் கோட்பாடுகளைக் குறிப்பிடுமாறு பரீட்சார்த்திகளைக் கேட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்கத் தவறியிருந்தனர். சராசரி எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் இந்தப் பகுதிக்கு விடையளிப்பதைத் தவிர்த்திருந்தனர் அல்லது ஒன்று, இரண்டு விடயங்களை மாத்திரம் வழங்கியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் வினாவை விளங்கிக் கொள்ளாது தவறான விடைகளை அளித்திருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

### வினா இல. 03

இவ்வினா **(a), (b)** என்ற இரு பகுதிகளை மாத்திரம் உள்ளடக்கியிருந்தது.

**(a)** **BrightTech Ltd**. இற்கு ஊக்கப்படுத்தல் ஏன் முக்கியமானது என்பதற்கான மூன்று (03) காரணங்களை விபரிக்குமாறு இவ்வினா பரீட்சார்த்திகளைக் கேட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் ஊக்கப்படுத்தலின் அடிப்படைப் புரிதலை வெளிக்காட்டியிருந்தனர்; எவ்வாறாயினும், ஏனையவர்கள் அதனைத் தெளிவாகப் புரிந்து கொள்ளாது, தமது விடைகளை **BrightTech Ltd**. உடன் தொடர்புபடுத்தத் தவறியிருந்தனர்.

இங்கு அதிகரித்த உற்பத்தித்திறன், நிறுவன வினைத்திறனை உறுதிப்படுத்தல், விசுவாசமான மற்றும் பொறுப்புணர்வான வேலைப்படையை வளர்த்தெடுத்தல், மற்றும் வழிப்படுத்தலுக்கு வசதியளித்தல் போன்ற துல்லியமான விடைகள் எதிர்பார்க்கப்பட்டன. ஒரு சில பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக விளங்கிக்கொள்ளாது, பொருளுடன் தொடர்புடைய நுகர்வோர் ஊக்கப்படுத்தல் பற்றி எழுதியிருந்தனர்.

**(b)** இவ்வினாவானது **வரையறுக்கப்பட்ட பிறைட்டெக் கம்பனி** அதன் போட்டி நிலையை மீளவும் பெற அது டிஜிடல் சந்தைப்படுத்தலை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை இரண்டு வழிகளில் விபரிக்குமாறு கேட்டிருந்தது. மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் மாத்திரமே துல்லியமான விடைகளை வழங்கி, ஒதுக்கப்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர். அதே வேளை பலர் டிஜிடல் சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்களில் மோசமான அறிவை வெளிக்காட்டியிருந்தனர். சில பதில்கள் போட்டி நிலைமை பற்றிக் கவனிப்பதை விடுத்து, டிஜிடல் சந்தைப்படுத்தலின் அனுகூலங்களில் கவனம் செலுத்தியிருந்தது. பல விடைகள் சமூக ஊடக சந்தைப்படுத்தலுக்கு மட்டுப்படுத்தப் பட்டிருந்தன. மேலும், சில பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக விளங்கிக்கொள்ளாது, வெறுமனே விடயங்களை விளங்கப்படுத்தாது குறிப்பிட்டிருந்தனர் அல்லது இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சிக்கவில்லை.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.***

### வினா இல. 04

இவ்வினா 10 புள்ளிகளுக்காக **(a), (b), (c)** என்ற மூன்று பகுதிகளை உள்ளடக்கியிருந்தது.

**(a)** **வரையறுக்கப்பட்ட சில்வர்லைன் கம்பனிக்கு** நல்ல நிறுவனக் கட்டமைப்பால் ஏற்படும் நான்கு (04) நன்மைகளைக் குறிப்பிடுமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்பட்டனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடைகளை வழங்கி, ஒதுக்கப்பட்டிருந்த புள்ளிகளைப் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் ஒரே விடைகளை பல தடவைகள் திரும்பத் திரும்ப எழுதியிருந்தனர். பலர் முகாமைத்துவம் மற்றும் நிறுவனக் கட்டமைப்பு எண்ணக்கருக்கள் தொடர்பில் குழப்பமடைந்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் வினாவைத் துல்லியமாக வாசிக்காது மாற்று விடைகளை வழங்கியிருந்தனர்.

**(b)** இவ்வினாவானது **வரையறுக்கப்பட்ட சில்வர்லைன் கம்பனியின்** வெற்றிக்கு, செயற்பாட்டு முகாமைத்துவம் ஏன் முக்கியமானது என்பதற்கான இரண்டு (02) காரணங்களை விபரிக்குமாறு கேட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் ஏற்றுக்கொள்ளத்தக்க விடைகளை வழங்கியிருந்தனர். எவ்வாறாயினும், முகாமைத்துவத்திற்கும் செயற்பாட்டு முகாமைத்துவத்திற்கும் இடையிலான வேறுபாட்டை பகுத்தறியும் ஆற்றல் பரீட்சார்த்திகளிடம் குறைவாகவே காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது. சில பதில்களில், பரீட்சார்த்திகள் தெளிவான விபரிப்புகளின்றி காரணத்தை மட்டும் வெறுமனே குறிப்பிட்டிருந்தனர். சில பரீட்சார்த்திகள் சம்பந்தமற்ற தகவல்களை உள்ளடக்கியிருந்தனர். இதனால் புள்ளிகளை வழங்க முடியவில்லை.

**(c)** பொதுவாக, முகாமைத்துவத்தின் நன்மைகள் தொடர்பில் பரீட்சார்த்திகள் விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும், அதே நன்மைகள் வெவ்வேறு வடிவங்களில் அடிக்கடி மீண்டும் மீண்டும் எழுதப்பட்டிருந்தன. பல பதில்களில் தெளிவின்மையும் சரியான கட்டமைப்பின்மையும் காணப்பட்டன. பரீட்சார்த்திகள் விரிவான, நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் துல்லியமான முன்வைப்புகளைச் செய்ய இடர்பட்டிருந்ததுடன், முகாமைத்துவ எண்ணக்கருக்கள் பற்றிய ஆழமான புரிதல் குறைவாகவே வெளிப்பட்டிருந்தது.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.***

## வினா இல. 05

இவ்வினா 10 புள்ளிகளுக்காக **(a), (b), (c)** என்ற மூன்று பகுதிகளை உள்ளடக்கியிருந்தது.

**(a)** வேலை விபரிப்பு மற்றும் வேலை விவரணம் ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாட்டை விபரிக்குமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்பட்டனர். சராசரிக்கும் குறைவான பரீட்சார்த்திகளே சரியான விடைகளை அளித்திருந்தனர். பலர் வேலை விவரண எண்ணக்கரு பற்றிய எவ்வித புரிதலையும் கொண்டிருக்கவில்லை அல்லது சிறிதளவான புரிதலையே கொண்டிருந்தனர்.

**(b)** பரீட்சார்த்திகள் **நோவா டெக்ஸ்டைல்ஸ்** இற்கு பயனுறுதிமிக்க செயற்றிறன் மதிப்பீட்டு முறைமை ஏன் முக்கியமானது என்பதற்கான இரண்டு (02) காரணங்களை விபரிக்குமாறு கேட்கப்பட்டனர். பல பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு விடையளிக்க முயற்சித்திருந்த போதிலும், விடைகள் தெளிவானவாறு வினாவுடன் ஒத்துப்போகவில்லை என்பதை அவதானிக்க முடிந்தது. அதிகளவான பரீட்சார்த்திகளின் விடைகளில் திறனின்மை வெளிப்பட்டது. அவர்களது விடைகளை விபரித்தமையானது பொதுவாக போதுமானதாக அமையவில்லை.

**(c)** இவ்வினாவானது **நோவா டெக்ஸ்டைல்ஸ்** இன் ஊழியர்கள் மாற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்கான மூன்று (03) காரணங்களைக் குறிப்பிடுமாறு பரீட்சார்த்திகளைக் கோரியது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் நிச்சயமற்றதன்மை, சுயநலம் மற்றும் அதிகாரத்திற்கான அச்சுறுத்தல், வேறுபட்ட உணர்வுகள், இழப்பாக உணர்தல், தோல்வி பயம் போன்ற சரியான விடைகளை வழங்கியிருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் தகவல் தொழினுட்ப முறைமை மாற்றங்களில் மாத்திரம் கவனஞ் செலுத்தி, எதிர்ப்புக்கான ஏனைய சாத்தியமான காரணங்களை புறந்தள்ளியிருந்தனர்.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.***

**வினா இல. 06**

இது தந்திரோபாயங்கள், தலைமைத்துவம், கட்டுப்படுத்தலில் **வரையறுக்கப்பட்ட ஸெனித் கம்பனி** கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகளில் பரீட்சார்த்திகள் கொண்டுள்ள அறிவைப் பரீட்சிக்க அமைக்கப்பட்ட ஒரு வினாவாகும்.

**(a)** இவ்வினாவில் நிறுவனங்கள் பயன்படுத்துகின்ற இரண்டு (02) தீவிர தந்திரோபாயங்களை விபரிக்குமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்பட்டனர். இதற்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மோசமாக அமைந்திருந்தது. சில பரீட்சார்த்திகள் தரப்பட்ட விவரணத்திற்குச் சம்பந்தமற்ற விடைகளை அளித்திருந்தனர். இது வினா பற்றிய விளக்கமின்மையைப் பிரதிபலிக்கிறது. மிகச் சில பரீட்சார்த்திகள் ஒதுக்கப்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர். மேலும், பல பரீட்சார்த்திகள் தீவிர தந்திரோபாயங்களைச் சரியாக அடையாளங் காணணவில்லை. பாட விடயங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அறிவு காணப்பட்டதன் விளைவாக பூரணமற்ற விடைகள் எழுதப்பட்டிருந்தன.

**(b)** இவ்வினா உருமாற்றத் தலைமைத்துவம் மற்றும் பரிமாற்றத் தலைமைத்துவம் ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாட்டை விபரிக்குமாறு பரீட்சார்த்திகளைக் கேட்டிருந்தது. பரிமாற்றத் தலைமைத்துவத்துடன் ஒப்பிடும்போது உருமாற்றத் தலைமைத்துவம் பற்றி பெரும்பாலான பரீட்சார்த்திகளிடம் சிறிதளவான அறிவே காணப்பட்டது அல்லது எவ்வித அறிவும் காணப்படவில்லை. வழங்கப்பட்ட விளக்கங்கள் பெரும்பாலும் தெளிவற்றதாக அல்லது தவறானதாக இருந்தன. பரீட்சார்த்திகள் சிறிதளவு புரிதலையே வெளிப்படுத்தி, இரண்டு பாணிகளுக்கிடையிலுமான வேறுபாட்டை ஏற்பிசைவு செய்ய அல்லது விபரிக்கத் தவறியதால் வெற்றிகரமான விடைகள் வழங்கப்படவில்லை.

**(c)** **வரையறுக்கப்பட்ட ஸெனித் கம்பனி** கட்டுப்படுத்தலில் கவனத்தில் கொள்ள வேண்டிய மூன்று (03) காரணிகளைக் குறிப்பிடுமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்பட்டனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் தரப்பட்ட விவரணத்தைக் கணக்கிலெடுக்காது மோசமான விடைகளை வழங்கியிருந்தனர். பலர் வினாவில் கேட்கப்பட்டது என்ன என்பதைத் துல்லியமாக அடையாளங் காணத் தவறியிருந்தனர். இது வெற்றிகரமான பதில்களை வழங்கி, புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதைத் தடுத்திருந்தது.

புள்ளிகளை ஈட்டியவர்கள் பின்வருவன போன்ற சரியான விடைகளை எழுதியிருந்தனர்:

- திட்டமிடப்பட்ட நோக்கங்கள்
- சிக்கல்தன்மையை உள்வாங்கும் திறன்
- நிறுவனங்களின் பக்க மற்றும் கட்டமைப்புடனான இணக்கத்தன்மை.
- ஊக்கப்படுத்தல் மட்டம்.
- முகாமைத்துவத்தின் எதிர்பார்ப்புகள்
- செலவு குறைந்த தன்மை.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.***

## பகுதி C

**வினா இல. 07**

இலங்கையின் விருந்தோம்பல் தொழிற்றுறையின் சில அம்சங்களைப் பரீட்சிப்பதற்கு **Moon Hotels PLC** தொடர்பான ஒரு விடய ஆய்வை அடிப்படையாகக் கொண்ட வினாவாக இது அமைந்திருந்தது. இதற்காக ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகள் 25 ஆகும். இவ்வினா **(a), (b), (c), (d), (e)** என 5 பகுதிகளை உள்ளடக்கி இருந்தது.

**(a)** நவீன யுகத்தில் ஒரு தலைவருக்குத் தேவையான மூன்று (03) தலைமைத்துவச் சிறப்புக் காரணிகளைக் குறிப்பிடுமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்பட்டனர். பல பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு துல்லியமாக விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும், ஒரு சில பரீட்சார்த்திகள் நவீன யுகத்துடன் தொடர்புபடுத்தாது பொதுவான அம்சங்களில் கவனம் செலுத்தியிருந்தனர். மேலும், சிலர் தலைமைத்துவச் சிறப்புக் காரணிகளை எழுதுவதற்குப் பதிலாக தலைமைத்துவப் பணிகள், தரப் பண்புகள், அல்லது திறன்களைப் பட்டியலிட்டிருந்தனர்.

**(b)** **மூன் ஹோட்டல்ஸ் பீ.எல்.சீ.** இல் ஒரு தலைவர் ஆற்ற வேண்டிய மூன்று (03) முக்கிய வகிபாகங்களை விபரிக்குமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்பட்டனர். பல பரீட்சார்த்திகள் மோசமாகப் பதிலளித்து பிழையாக விடையளித்திருந்தனர். இது ஒரு நேரடி வினாவாகும். பரீட்சார்த்திகள் துல்லியமாக விடையளித்து சிறந்த புள்ளிகளை ஈட்டுவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. சில பரீட்சார்த்திகள் ஒரு தலைவரின் முக்கிய வகிபாகங்களுக்குப் பதிலாக ஹென்றி மின்ஸ்பேக்கால் விவரிக்கப்பட்ட முகாமைத்துவ வகிபாகங்களைப் பட்டியலிட்டிருந்தனர். இதன் விளைவாக, அவர்களுடைய பதில்கள் பலவீனமாகக் காணப்பட்டதுடன் குறைவான புள்ளிகளையே பெற்றுக் கொண்டனர்.

**(c)** இவ்வினாவானது **மூன் ஹோட்டல்ஸ் பீ.எல்.சீ.** இற்கு பயனுறுதிவாய்ந்த சந்தைப்படுத்தல் ஏன் முக்கியமானது என்பதற்கான மூன்று (03) காரணங்களை விபரிக்குமாறு பரீட்சார்த்திகளைக் கேட்டிருந்தது. ஒட்டுமொத்தத்தில், செயலாற்றுகை திருப்தியாக இருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு ஒதுக்கப்பட்ட முழுப் புள்ளியான ஆறு (06) புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**(d)** இவ்வினாவானது **மூன் ஹோட்டல்ஸ் பீ.எல்.சீ.** தொடர்பில், தவறான ஊழியர் தெரிவுத் தீர்மானத்தின் நான்கு (04) விளைவுகளைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. ஒட்டுமொத்தத்தில் செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் பொருத்தமான விடைகளை வழங்கியிருந்தனர்.

**(e)** இவ்வினாவானது **மூன் ஹோட்டல்ஸ் பீ.எல்.சீ.** அதன் இலக்குகளை அடைவதற்கு தந்திரோபாயத் திட்டம் எவ்வாறு உதவும் என்பதை மூன்று (03) வழிகளில் விபரிக்குமாறு கேட்டிருந்தது. பல பரீட்சார்த்திகள் வலியுறுத்தப்பட்ட பிரதான விடயங்கள் பற்றி சரியான புரிதலைக் கொண்டிருக்கவில்லை. இதனால் இப்பகுதிக்கான செயலாற்றுகை திருப்தியற்றதாகக் காணப்பட்டது. மிகச் சில பரீட்சார்த்திகள் மாத்திரமே துல்லியமான விடைகளை வழங்கி, ஒதுக்கப்பட்ட முழுப் புள்ளிகளையும் பெற்றுக் கொண்டனர்.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.***

------

**<u>பரீட்சார்த்திகளின் விளங்கிக்கொள்ளும் மட்டத்தையும் ஆற்றல் மட்டத்தையும் மேம்படுத்தும் பொருட்டு கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய பொதுவான காரணிகள்</u> :**

**(1)** பாடத்திட்டத்தை/ பாடப்புத்தகத்தை நன்கு படிக்கவும்.

**(2)** வினாத்தாளைப் பெற்றவுடன் அறிவுறுத்தல்களை கவனமாக வாசிக்கவும் (இந்நோக்கத்திற்காக கூடுதல் நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது).

**(3)** பரீட்சார்த்திகள் வினாவை பல தடவைகள் வாசித்து, எதனை விபரிக்க வேண்டும் என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும். நேரடி விடையொன்று எதிர்பார்க்கப்படும் போது விடைகள் துல்லியமாக வழங்கப்பட வேண்டும். தேவையற்ற விபரிப்புகளையும் விபரங்களையும் எழுதுவது தவிர்க்கப்பட வேண்டும்.

**(4)** விடைகள் ஒரு மொழியில் மாத்திரம் எழுதப்பட வேண்டும். இந்த மொழிமூலமானது நீங்கள் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது விண்ணப்பித்த மொழிமூலமாகவே இருத்தல் வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு வினாவுக்குமான விடைகளை எழுத ஆரம்பிக்கும்போது விடைப் புத்தகத்தின் ஒரு புதிய பக்கத்தில் எழுத ஆரம்பிக்கவும்.

**(5)** பரீட்சையின்போது நேரத்தை வினைத்திறனான முறையில் பயன்படுத்தவும்.

**(6)** விடைப் புத்தகத்தை கையளிப்பதற்கு முன்னர், எல்லா வினா இலக்கங்களையும் இரு முறை பரீட்சிப்பதுடன் சுட்டெண் சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதையும் பரீட்சிக்கவும்.

**(7)** “செயல் வினைச்சொல் செவ்வை நிரல்’’ வினாத்தாளின் இறுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் வினைச்சொல் ஒன்றைக் கொண்டிருக்கும். பரீட்சார்த்திகள் அந்தச் செவ்வை நிரலில் தரப்பட்ட வரைவிலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு விடையளித்தல் வேண்டும்.

**(8)** கையெழுத்து தெளிவானதாக இருப்பதையும் வினா இலக்கங்கள் ஒவ்வொரு விடைக்கும் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளதையும் உறுதிப்படுத்துங்கள்.

**(9)** AAT இனால் வெளியிடப்பட்ட சுய கற்றல் பாடப் புத்தகத்தையும் கட்டுரைகள், சஞ்சிகைகள் போன்றவற்றையும் வாசிப்பது முக்கியமானதாகும்.

**(10)** கடந்தகால வினாத்தாள்களுக்கும் முன்னோடி வினாத்தாள்களுக்கும் விடையளித்து பயிற்சி பெறுவது அறிவை மேம்படுத்த உதவும்.

**(11)** சித்தியடைகின்ற உறுதியான நேர்மறையான மனநிலையுடன் பரீட்சையை எதிர்கொள்ளுங்கள்.

-***-